

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில், ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் வல்லூரில் நடைபெற்றது. இதில் மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்எஸ்கே. ரமேஷ்ராஜ் கலந்துகொண்டு கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ புதிய உறுப்பினர்கள் சேர்க்கை முகாம் அதிகப்படுத்துதல் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினர். அருகில் மாவட்ட அவை தலைவர் மு.பகலவன், மாநில நிர்வாகிகள் பாஸ்கர் சுந்தரம், ஜி. ஸ்டாலின்,கே.வி.ஜி. உமா மகேஸ்வரி, எம்.எல்.ரவி, கே.எஸ்.மணி, ஏ.வி.ராமமூர்த்தி, பா.செ.குணசேகரன். வெங்கடாஜல பதி, டாக்டர் பரிமளம், வக்கீல் சுரேஷ் கே.வி. ஆனந்தகுமார், டி.கே.சந்திரசேகர், செல்வசேகரன், மணிபாலன், சக்திவேல், ஜான் பொன்னுசாமி, முரளி, ஆ.ராஜா, ஜெகதீசன், உதயசூரியன். ஞாயிறு ஆனந்தகுமார், பரிமளம், ரவிக்குமார், அறிவழகன் தமிழ் உதயன், , மணி, சம்பத்குமார், முகமது அலவி, தேசராணி தேசப்பன், ஜெயலலிதா, கோபி, ஆறுமுகம், மோகன்ராஜ் மாவட்ட பிரதிநிதி வல்லூர் பா.து. தமிழரசன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



சில இலக்கிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக இலங்கை சென்றுள்ள கலைமாமணி ஏர்வாடி எஸ் இராதாகிருஷ்ணன் யாழ்ப்பாணம் நூலகத்திற்குச் சில நூல்களை அன்பளிப்பாக வழங்கி மகிழ்ந்தார். அது மட்டும் இல்லாமல் தொடர்ந்து நூல்களை அனுப்புவதற்கான ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார். தமிழகத்திலிருந்து இந்தியத்தூதராக இருக்கும் சாய் முரளியைச் சந்தித்து அதற்கான ஏற்பாடுகளை செய்து தர வேண்டியுள்ளார். இலங்கையில் மல்லிகைத் தீவு எஸ்.கே. நடேச பிள்ளை முன் நின்று இந்தப் பணிகளை செய்து வருவகிறார்.

### அரியலூர் மாவட்டத்தில்

# ரூ.9.11 கோடி மதிப்பீட்டில் 27 புதிய வளர்ச்சித் திட்டப்பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், ஜூலை 21 -

அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்றத் தொகுதி, செந்துறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு கிராமங்களில் ரூ.9.11 கோடி மதிப்பீட்டில் 27 புதிய வளர்ச்சித்திட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் துவக்கி வைத்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, அரியலூர் மாவட்டத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் கிராம சாலைகளை மேம்படுத்துதல், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைத்தல், பள்ளி வகுப்பறைகள் கட்டுதல், அங்கன்வாடி மையக் கட்டடங்கள் கட்டுதல், போர்வெல் மற்றும் சிமெண்ட் தொட்டி அமைத்தல், கதிரடிக்கும் களம் அமைத்தல், குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல், ஏரிகள் புனரமைத்தல் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றையதினம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் குன்னம் சட்டமன்ற தொகுதி, செந்துறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு கிராமங்களில் ரூ.9.11 கோடி மதிப்பீட்டில் 27 புதிய வளர்ச்சித் திட்டப்பணிகளை தொடங்கி வைத்தார்.

அதன்படி செந்துறை ஊராட்சி ஒன்றியம் கீழராயம்புரம் கிராமத்தில் ரூ.13.33 இலட்சம் மதிப்பீட்டில் தெற்கு தெருவில் மெட்டல் சாலை அமைக்கும் பணியையும், பின்னர் சின்ன ஆனந்தவாடி கிராமத்தில் ரூ.151.16 இலட்சம் மதிப்பீட்டில் சின்ன ஆனந்தவாடி முதல் கடுகூர் வரை சாலை மேம்படுத்தும் பணியையும், தொடர்ந்து ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் சின்ன ஆனந்தவாடி கணி ஏரி தூர் வாரும் பணியையும் மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து, ஆனந்தவாடி ஊராட்சியில் அரியலூர் முதல் சென்னை கிளாம்பாக்கம் வரை சென்று வந்த பழைய பேருந்துக்கு பதிலாக, புதிய BS VI பேருந்தை, சென்னை மாதவரம் வரை தட நீடிப்பு செய்து கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பின்னர், ஆனந்தவாடி ஊராட்சி, ஆதிதிராவிடர் பகுதி 7வது தெருவில் ரூ.17.50 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியை தொடங்கி வைத்தார். தொடர்ந்து பெரிய ஆனந்தவாடி கிராமத்தில ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார் அதனைத் தொடர்ந்து, ஆ.சோழன்குறிச்சி ஆதிதிராவிடர் பகுதியில் ரூ.14.41 இலட்சம் மதிப்பீட்டில் கொட்டகை, சுற்றுச்சுவர், சிறுபாலம் மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியையும், பின்னர், ஆனந்தவாடி ஊராட்சியில் ரூ.13.34 இலட்சம் மதிப்பீட்டில் மெட்டல் சாலை அமைக்கும் பணியையும், ஆனந்தவாடி ஊராட்சியில் ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் பெரிய ஏரி தூர் வரும் பணியையும், ரூ.4.20 இலட்சம் மதிப்பீட்டில் சம்பூர்ணம் ஏரி தூர்வாரும் பணியையும், ரூ.7.20 இலட்சம் மதிப்பீட்டில் சித்தேரி ஏரி தூர் வாரும் பணியையும் துவக்கி வைத்து, பணிகளை விரைவாகவும், தரமாகவும் முடித்திட சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், கிளிமங்கலம் கிராமத்தில் ரூ.75.94 இலட்சம் மதிப்பீட்டில் கிளிமங்கலம் முதல் தெற்கு கிளிமங்கலம் வரை சாலை மேம்படுத்தும் பணியையும், தொடர்ந்து கிளிமங்கலம் ஆதிதிராவிடர் பகுதியில் ரூ.10.67 இலட்சம் மதிப்பீட்டில் சிறுபாலம் மற்றும் மெட்டல் சாலை அமைக்கும் பணியையும், பின்னர், பாளையக்குடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ரூ.35.25 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறை கட்டடம் கட்டும் பணியையும், அதனைத்தொடர்ந்து வாளரக்குறிச்சி கிராமத்தில் ரூ.99.67 இலட்சம் மதிப்பீட்டில் வாளரக்குறிச்சி முதல் கீழத்தெரு வரையில் சாலை அமைக்கும் பணியையும், தொடர்ந்து ரூ.29.61 இலட்சம் மதிப்பீட்டில் வாளரக்குறிச்சி ஆதிதிராவிடர் பகுதியில் சிறுபாலம் மற்றும் மெட்டல் சாலை அமைக்கும் பணியையும், அதனைத்தொடர்ந்து இரும்புலிக்குறிச்சி கிராமத்தில் ரூ.4.40 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியையும், ரூ.4 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியையும், மேலும், ரூ.5.82 இலட்சம் மதிப்பீட்டில் இரும்புலிக்குறிச்சி ஆதிதிராவிடர் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிகளையும் தொடங்கி வைத்து பணிகளை தரமான கட்டுமான பொருட்களை கொண்டு விரைவாக கட்டி முடித்திட சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து குமிழியம் ஊராட்சியில் ரூ.4 இலட்சம் மதிப்பீட்டில் குமிழியம் ஆதிதிராவிடர் பகுதி மாரியம்மன் கோவில் வரையில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியையும், தொடர்ந்து ரூ.4 இலட்சம் மதிப்பீட்டில் குமிழியம் ஆதிதிராவிடர் பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியையும், பின்னர், பரணம் ஊராட்சியில் ரூ.125.46 இலட்சம் மதிப்பீட்டில் வடக்கு பரணம் முதல் தெற்கு பரணம் வரை சாலை அமைக்கும் பணியையும், தொடர்ந்து பரணம் ஊராட்சியில் ரூ.11.50 இலட்சம் மதிப்பீட்டில் மெட்டல் சாலை அமைக்கும் பணியையும், பின்னர், ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் பரணம் ஊராட்சியில் மெட்டல் சாலை அமைக்கும் பணியையும் தொடங்கி வைத்தார். தொடர்ந்து, பரணம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளின் கோரிக்கையினை ஏற்று பள்ளி மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் காலை, மாலை என இருவேளைகளிலும் புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கத்தினை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து, பிலாக்குறிச்சி ஊராட்சியில் ரூ.56.90 இலட்சம் மதிப்பீட்டில் பிலாக்குறிச்சி வடக்கு முதல் செதலவாடி ஆதிதிராவிடர் பகுதி இணைப்பு சாலை அமைக்கும் பணியையும், தொடர்ந்து ரூ.145.70 இலட்சம் மதிப்பீட்டில் பிலாக்குறிச்சி பெரிய ஏரி வழியாக ஆதிதிராவிடர் பகுதி வரை சாலை அமைக்கும் பணியையும், பின்னர், ரூ.6.60 இலட்சம் மதிப்பீட்டில் பிலாக்குறிச்சி கிராமத்தில் மெட்டல் சாலை அமைக்கும் பணியையும், தொடர்;ந்து, ரூ.29.61 இலட்சம் மதிப்பீட்டில் பிலாக்குறிச்சி கிராமத்தில் வனத்துறை காடு வரை மெட்டல் சாலை அமைக்கும் பணியையும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து, பணிகளை உரிய காலத்திற்குள் தரமான கட்டுமானப் பொருட்களை கொண்டு விரைவாக முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தினார்.

பின்னர், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இன்றையதினம் அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட செந்துறை ஒன்றியத்தில் பல்வேறு புதிய சாலை பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. அதே போன்று புதிய பள்ளி கட்டடங்களும் கட்டுவதற்கு பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில் செந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் ஆனந்தவாடி, பாளையக்குடி, இரும்புலிக்குறிச்சி, குமிழியம், பிலா க்குறிச்சி என 5 ஊராட்சிகளில் புதிய பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. SETC பணிகளுக்கான விண்ணப்பங்கள் ஆன்லைன் வாயிலாக பெறப்பட்டு எழுத்துத் தேர்வு இந்த மாதம் நடைபெறுவதற்கு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. எழுத்துத் தேர்வுக்கான அனுமதி தாள்களை இணையதளத்திலிருந்து பதவிறக்கம் செய்து தேர்வு எழுதலாம். தேர்வு எழுதிய பிறகு அதில் அதிக மதிப்பெண்கள் பெறுவோருக்கு நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டு பணியமர்த்தப்படுவார்கள். 7 அரசு போக்குவரத்து கழகங்களின் வாயிலாக சுமார் 3200 பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் புதிய பேருந்துகள் வாங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து 11 புதிய பேருந்துகள் வாங்குவதற்கு அனுமதி வழங்கி தற்போது 4500 பேருந்துகள் மக்களுடைய பயன்பாட்டிற்கு வரப்பெற்றுள்ளது. 15 ஆண்டுகள் பயன்பாட்டில் இருந்து பேருந்துகள் அகற்றப்பட்டு அந்த இடங்களில் இப்புதிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. மஞ்சள் நிற புறநகரப் பேருந்துகள் இயக்கப்படுகிறது. அதே போன்று கிராமபுறங்களில் நகர்ப்புற பேருந்துகள் நீல நிறப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. அரசு விரைவு போக்குவரத்து கழகத்திற்கும் புதிய பேருந்துகள் செயல்பாட்டிற்கு வந்துள்ளது. தமிழ்நாடு போக்குவரத்து துறை மிகப் பெரிய மாற்றத்தினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான ஆட்சியில் கண்டுள்ளது. உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் அரியலூர் மாவட்டம், ஆதனக்குறிச்சியிலும், பெரம்பலூர் மாவட்டம் சித்தளியிலும் கலந்துகொண்டேன். இரண்டு இடங்களிலும் பொதுமக்கள் அதிகளவில் வருகைபுரிந்து மனுக்களை அளித்துள்ளார்கள். 15 துறைகள் மூலமாக 45 சேவைகள் வழங்குவதற்காக மனுக்கள் முகாம்கள் வாயிலாக பெறப்படுகிறது. இம்முகாம்கள் குறித்த தகவல்கள் வீடு வீடாக சென்று தெரிவிக்கப்படுகிறது. மிக குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமை தொகை வேண்டும் என்பவர்கள் அதிக அளவில் வந்து மனு அளிக்கின்றனர். இது மிகப்பெரிய வெற்றிகரமான நடவடிக்கையாக அமைந்துள்ளது என தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, செந்துறை வட்டாட்சியர் வேலுமணி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முருகன், ரவி மற்றும் இதர அரசு அலுவலர்கள், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் பூ.செல்வராஜ், பொன்.செல்வம்,மாவட்ட அணிகளின் அமைப்பாளர் கே.சி.லூயிக திரவன், ஆதி.இளங்கோவன், செ.இளஞ்செழியன், ரவிகுமார், கழக நிர்வாகிகள் காளமேகம், பொன்னுசாமி, ராமராஜன்,தர்மராஜ், செல்வம், ரமணி, சுந்தர், ஆனந்த், மற்றும் மாவட்ட,ஒன்றிய கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில்

# பொது மக்களின் கோரிகைகள் உடனடியாக நிறைவேற்றப்படும்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி!

திண்டுக்கல், ஜூலை 21 -

ஆத்தூர் தொகுதி பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று உடனடியாக நிறைவேற்றப்படும் என்று ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதியளித்தார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினரும், தி.மு.க. மாநில துணை பொதுச்செயலாளரும், ஊரகவளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்களிடம் ஆத்தூர் தொகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் மற்றும் கோரிக்கை மனுக்கை பெற்று உடனடியாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்பு கொண்டு பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற உத்தரவிட்டார். அப்போது சின்னாளபட்டி கீழக்கோட்டை முத்தலாம்மன், பகவதி அம்மன், பட்டாளம்மன் கோவிலை சேர்ந்த அறங்காவலர்கள் ஜமீன்தார் முத்துக்குமார் தலைமையில் கோவில் தலைவர் ஜெகநாதன், உதவி தலைவர் முருகேசன், பொருளாளர் நாகராஜன், செயலாளர் பால்பாண்டி குமார், ஆகியோர் 18 சமுதாய மக்களுடன் சேர்ந்து கோவிலை புணரமைத்து கும்பாபிஷேகம் நடத்துவதற்கு உதவிட வேண்டும் என்று கோரிக்கை மனுவை அமைச்சரிடம் கொடுத்தனர். மனுவை பெற்றுக் கொண்ட அமைச்சர் ஐ. பெரியசாமி அவர்கள் அனைத்து சமுதாய மக்கள் ஒற்றுமையுடன் கொண்டாடும் கோவில் கும்பாபிஷேகத்திற்கு உதவி செய்ததோடு அறநிலையத் துறை அதிகாரிகளுக்கும் இது குறித்து பேசுகிறேன் என தெரிவித்தார். அதற்கு சின்னாளபட்டி கீழக்கோட்டை பகுதியைச் சேர்ந்த அனைத்து சமுதாய மக்களும் அமைச்சருக்கு சால்வை அணிவித்து நன்றி தெரிவித்தனர். அதன்பின்னர் ஆத்தூர் ஒன்றியம் மணலூர் ஊராட்சிக்குட்பட்ட ஆர்.ஆர்.நகர் மக்கள் அப்பகுதியில் உள்ள ஏலக்காய் கம்பெனி கழிவுகளால் பாதிக்கப்படுவதாகவும் அவற்றை அகற்றி தர வேண்டும் என அமைச்சரிடம் கோரிக்கை மனு கொடுத்து அதற்கு தீர்வு பெற்றதற்கு ஆர்.ஆர்.நகர் மக்கள் அமைச்சருக்கு ஏலக்காய் மாலை அணிவித்து நன்றி தெரிவித்தனர். அப்போது பொதுமக்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் ஆத்தூர் தொகுதி முழுவதும் கிராமம் கிராமமாக சென்று பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று அதே இடத்தில் தீர்வு வழங்க உள்ளேன் என்றார். அதற்கு ஆத்தூர் தொகுதி பொதுமக்கள் மனதார பாராட்டும் நன்றியும் தெரிவித்தனர். அதன் பின்னர் ஸ்ரீராமபுரம் பேரூராட்சி பகுதியை சேர்ந்த பொதுமக்கள் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் முத்துக்குமார் தலைமையில் சங்கரலிங்கம் பகுதிக்கு பகுதி நேர நியாயவிலை கடை வசதி வேண்டும் என கோரிக்கை மனு கொடுத்தனர். உடனடியாக அப்பகுதியில் பகுதி நேர நியாய விலை கடை அமைக்க அமைச்சர் உத்தரவிட்டதற்கு அப்பகுதி மக்கள் சால்வை அணிவித்து அமைச்சருக்கு நன்றி தெரிவித்தனர். நிகழ்ச்சியின் போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபானி, ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், பிள்ளையார்நத்தம் முருகேசன், திண்டுக்கல் நெடுஞ்செழியன், திமுக நிர்வாகி அம்பை ரவி, ஆத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகேசன், அமைச்சரின் உதவியாளர் வத்தலகுண்டு ஹரிஹரன், பொதுக்குழு உறுப்பினர் அக்பர் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் முத்துக்குமார், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகா னந்தம், பலர் உடன் இருந்தனர்.





‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கை நேற்று ஆலந்தூர் 161வது வட்டம் 245வது பாகத்தில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது. இதில் மனோகரன், பூவராகவன் , பாண்டியன், தரணிவேந்தன், திலீப், கௌஸ், சாரதா, சேது உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தலைமைக் கழகப் பேச்சாளர் - 23-வது வட்ட முன்னாள் செயலாளர்

# புழல் து.திருநாவுக்கரசு 6-ஆம் ஆண்டு நினைவுநாள்!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. – ஜி.துக்காராம் – கே.பி.சுந்தரேசன் மலரஞ்சலி! து.முரளிவரன் ஏற்பாட்டில் உணவு!

சென்னை. ஜூலை 21

தலைமை கழகத்தினுடைய பேச்சாளரும் 23-வது வட்டக் கழகத்தின் முன்னாள் செயலாளருமான புழல் து.திருநாவுக்கரசு அவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு இன்று (21.7.2025 திங்கள்கிழமை) மதியம் 12.30 மணியளவில் புழல் ஜி.என்.டி. சாலை கேம்பில் மாதவரம் தெற்கு பகுதி ஆதிதிராவிட நலக் குழு அமைப்பாளர் து.முரளிவரன் ஏற்பாட்டில் மதிய உணவு வழங்கப்படுகிறது.



சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம், மாதவரம் தெற்கு பகுதி செயலாளர் ஜி. துக்காராம், வட்ட செயலாளர் கே.பி.சுந்தரேசன் ஆகியோர் தலைமையில் வட்ட நிர்வாகிகள், கழகத் தோழர்கள் முன்னிலையில் மலரஞ்சலி செலுத்தி பொது மக்களுக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது.

புழல் து. திருநாவுக்கரசு இளமைக் காலம் முதலே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர். புழல் பேரூர்க் கழகத்தில் 13வது வார்டு செயலாளராகவும், பேரூர் மாணவர் அணி அமைப்பாளராகவும், பின்னர் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராகவும், அதன்பின் புழல் பேரூர்க் கழகச் செயலாளராக நான்கு முறையும், சென்னை வடக்கு மாவட்டம் 23வது வட்டச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர். கழகச் சொற்பொழிவாளராக பணியாற்றி தமிழகம் முழுவதும் கழகக் கொள்கைகளை பரப்பியவர். கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில் அனைத்து கழகத் தோழர்களும், நிர்வாகி களும், முன்னாள் நிர்வாகி கள், இளைஞர் அணித் தோழர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக்க உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு 24-வது வட்டக் கழகச் செயலாளர் கே.பி.சுந்தரேசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ர. லோகநாதன்

### ஜூலை 21 (2022)



இளமைக் காலம் முதலே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

எழும்பூர் பகுதியில் அண்ணா படிப்பகச் செயலாளராகவும் தொடர்ந்து பகுதி பிரதிநிதி, வட்டச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

சென்னை தொலைபேசி ஆலோசனைக்குழு உறுப்பினராக இருந்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**